# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 05 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி இருப்பு, கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியே காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,586,231 கிரயப்பெறுமதி இறுதி இருப்பாகக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இவ் இருப்பில் கருத்தில் கொள்ளக்கூடிய அளவிலான எழுதுகருவி இருப்பொன்று பயன்பாட்டிற்கு எடுக்க முடியாததாக நிறம் மாறியிருந்த போதிலும், அவ் எழுதுகருவி இருப்பின் பெறுமதியை இருப்பு நட்டமாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் பிரகாரம் இரண்டு தரப்பினருக்கு இடையே இணக்கப்பாடொன்றிற்கு வராத ரூபா 110,632,274 தொகையான நிகழத்தக்க வரிப் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 6,986,498 கிரயத்தையுடைய கணனி மென்பொருட்கள் வருமானத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய கணக்குகளுக்குரிய ரூபா 214,805,125 கூட்டுத்தொகை நிலுவையாக இருந்ததுடன், அதில் ரூபா 14,584,634 ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவை மீதியாக காணப்பட்டது. அவ்வாறே, மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய கணக்குகளுக்குரிய ரூபா 46,325,975 கூட்டுத்தொகை தீர்க்கப்படாமல் இருந்ததுடன், அதில் ரூபா 812,320 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த மீதிகளாக காணப்பட்டன.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

மீளாய்வாண்டின் இறுதியில் 16 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 214,805,125 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்களும் 35 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 46,325,975 கூட்டுத்தொகையான செலுத்தவேண்டிய மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்களும் சமர்ப்பிக்கப் படாமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமிண்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| (i) 10(5) ஆம் பிரிவு | பகிர்விற்குப் பின்னர் எஞ்சியிருக்கும் தேறிய மிகை வருமானம் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 502,614,219 தொகையான திரண்ட இலாபம் 2011 திசெம்பர் 31 வரை செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 11 ஆம் பிரிவு | திறைசேரியின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 31 சந்தர்ப்பங்களில் ரூபா 507,937,571 மொத்த தொகை திறைசேரி உண்டியல் களிலும் நிலையான |

| | |
|---|---|
| | வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) 2000 இன் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 111 (அ) பிரிவு மற்றும் 2011 வரவு செலவுத் திட்ட கூற்று | அதிகாரசபையின் உத்தியோகத்தரால் அவர்களின் சம்பளங்களுக்காவும் ஏனைய உழைப்புக்களுக்காகவும் உழைக்கும் போது வரியை தனிப்பட்ட ரீதியில் ஏற்க வேண்டிய போதிலும், 2007 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளுக்காக ரூபா 11,916,740 கூட்டுத்தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரியை அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2008 யூன் 26 ஆம் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மேற்குறித்த சுற்றறிக்கைக்கு உரித்தற்ற பதவிநிலை மற்றும் பதவிநிலை தரமில்லாத உத்தி யோகத்தர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 15,000 மற்றும் ரூபா 10,000 வீதம் போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் செலுத்தப் பட்டிருந்த போக்குவரத்து படி முறையே ரூபா 9,888,671 மற்றும் ரூபா 20,967,837 ஆக இருந்தன. |
| (ஈ) முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை<br>--------------------------------------- | |
| (i) 2009 யூன் 01 ஆம் திகதிய 34(1) ஆம் இலக்க சுற்றிக்கை | அரச கூட்டுத்தாபனங்களில் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படும் ரூபா 350 முதல் ரூபா 500 வரையான இணைந்த படிகளுக்கு முரணாக ரூபா 1,500 முதல் 3,500 வரை அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு இணைந்த படி செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் முதல் 10 மாதங்களில் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த மொத்த படிகளின் அளவு ரூபா 1,247,500 ஆக இருந்தது. |

| | |
|---|---|
| (ii)2011 திசெம்பர் 22 ஆம் திகதிய 47 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஊழியர் ஒருவருக்காக திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 7,500 ஆன வருடாந்த உபகாரக் கொடுப்பனவிற்கு மேலதிகமாக சகல உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர் ஒருவருக்கு ஆகக்கூடியது ரூபா 27,500 என்ற வகையில் செயலாற்றுகை கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் சுற்றறிக்கைக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்ட படிகள் ரூபா 3,367,897 ஆக இருந்தது. |

(உ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) 1994 யூன் 04 ஆம் திகதிய 95 ஆம் இலக்க சுற்றறிக்கை | மேற்குறித்த சுற்றறிக்கைக்கு முரணாக பொதுத் திறைசேரியிடமிருந்து உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் படியாக மாதமொன்றிற்கு ரூபா 25,000 முதல் 75,000 வரையான படிகளும் மேலும் 4 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 750 முதல் ரூபா 5,000 வரையான விசேட கொடுப்பனவொன்றும் மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட துறைசார் ரூபா 2,557,500 ஆக இருந்தது.<br><br>அதிகாரசபைக்கு வெளியே தனியார் நிறுவனமொன்றில், பதவியணி பயிற்சி செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டிருந்ததுடன் செயலமர்வில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு ரூபா 603,750 ஆன விசேட கொடுப்பனவொன்று திறைசேரியின் அங்கீகாரம் இல்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 2011 ஏப்ரல் 29 ஆம் திகதிய 60 ஆம் இலக்க சுற்றறிக்கை | அதிகாரசபையால் 60 வயதிற்கு மேற்பட்டிருந்த 05 உத்தியோகத்தர்களை அமைச்சரவை அங்கீகாரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளாமல் சேவையிலீடுபடுத்தி சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,007,140 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

### 1.2.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உத்தியோகத்தர்கள் மற்றும் நலன்புரிச் சங்கங்களினால் தனிப்பட்ட ரீதியில் செலவுசெய்யப்பட வேண்டிய உணவு பானங்கள் உபசரிப்புச் செலவினம் ரூபா 873,160 தொகை மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) விமான வசதிகள் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக அதிகாரசபையின் அலுவலகத்தில் வைப்பதற்கு 08 மாதிரி விமானங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,254,000 செலவிடப்பட்டிருந்தது. இம்மாதிரி விமானங்களை வைப்பதினூடாக வாடகைக்கு பெற்றுக்கொண்ட கட்டத்தின் அலுவலக இடவசதி நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தது.

(இ) அமைச்சரினதும் அவரின் பதவியணியினரினதும் வெளிநாட்டு சுற்றுலாக்களுக்காக ரூபா 3,421,142 அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

### 1.2.7 மோசடியான கொடுக்கல்வாங்கல்கள்

வரிசை அமைச்சிலிருந்து சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் அமைச்சரின் பதவியணிக்குரிய உத்தியோகத்தர் ஒருவர், சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் திட்டமிடல் ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டமைக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருந்ததுடன், அவரிடமிருந்து எவ்வித சேவையையும் பெற்றுக்கொள்ளமால் மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,200,390 செலுத்தப்பட்டிருந்தது. அதன் மூலம் அவ் உத்தியோகத்தருக்கு 2 சம்பளங்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அவ் உத்தியோகத்தருக்கு அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்த வாகனத்திற்கு மீளாய்வாண்டில் எரிபொருளுக்காக ரூபா 462,135 தொகையும் பங்குபற்றியிருந்த வெளிநாட்டு சுற்றுலாக்களுக்கான விமானப் பயணச்சீட்டுக் கட்டணமாக ரூபா 258,901 தொகையும் அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 428,897,727 இலாபமாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 385,125,238 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 43,772,489

தொகையிலான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானமும் சேவைகளை வழங்குவதால் கிடைத்த வருமானமும் அதிகரித்தமையே மீளாய்வாண்டில் நிதிசார் விளைவு அதிகரித்தமைக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.1.2 பகுப்பாய்வுடன் கூடிய நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருமானம் 27.80% ஆன அதிகரிப்பொன்றையும் செலவினம் 59.93% ஆன அதிகரிப்பொன்றையும் காட்டியதுடன், மீளாய்வாண்டில் வரிக்கு முன்னரான செயற்பாட்டு நடவடிக்கைகளால் பெற்ற இலாபம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 11.37% ஆல் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

கீழே காட்டப்பட்டுள்ள சுட்டிக்காட்டியின்படி, முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் செயலாற்றுகையில் அதிகரிப்பொன்று தென்பட்டது.

| | விடயம் | விபரம் | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| (அ) | விமான நகர்வுகள் | (i) வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானம் - மணித்தியாலம் | 1,782 | 1,317 | 1,057 |
| | | (ii) நிரந்தர விமானப் போக்கு வரத்து கம்பனிகள் - விமானம் - மணித்தியாலம் | 41,891 | 32,590 | 27,545 |
| (ஆ) | பூர்த்தி செய்யப்பட்ட கணக்காய்வு | (i) செயற்பாடு | -- | 01 | 01 |
| | | (ii) ஒன்றிணைந்தவை (செயற்பாடும் பொருத்ததன்மையும்) | -- | -- | -- |
| | | (iii) விமான நிலையம் | -- | -- | 01 |
| (இ) | நிறைவேற்றப்பட்ட வசதிகள் / பாதுகாப்பு மற்றும் மேற்பார்வை செயற்பாடுகள் | (i)ரூம்ப் பரிசோதனைகளின் எண்ணிக்கை (விமானங்களின் பொருத்ததன்மை) | 65 | 30 | 72 |
| | | (ii) ரூம்ப் பரிசோதனைகளின் எண்ணிக்கை (ஒன்றிணைந்தவை) | --- | -- | -- |

| | | | |
|---|---|---|---|
| (iii) விமான நிலையம் | 20 | 09 | 10 |
| (iv) அபாயகரமான பொருட்கள் | 35 | 08 | 19 |

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

அதிகாரசபையின் விமானசேவை பரிசோதகர்களுக்காக 2011 ஆம் ஆண்டின் போது ஒன்று ரூபா 475 வீதம் 525 கழுத்துப்பட்டிகள் ரூபா 284,866 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அக்கழுத்துபட்டிகள் குறித்த தரத்திற்கு பொருந்தாத காரணத்தால் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) 3 ஆண்டு காலப்பகுதிக்காக தனியார் துறையினருக்குச் சொந்தமான கட்டிடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன், கட்டிட வளவில் களஞ்சிய அறை மற்றும் சாரதிகள் இளைப்பாறும் அறை என்பவற்றை நிர்மாணித்தல் மற்றும் திருத்தங்களுக்காக மொத்தம் ரூபா 28,214,123 அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2011 மார்ச் மாதத்திலிருந்து மாதாந்த வாடகை செலுத்தப்பட்டிருந்த போதும் கட்டிடத்தில் வெவ்வேறு நிர்மாணிப்புக்கள் மற்றும் திருத்தங்கள் என்பவற்றை கட்டிட உரிமையாளரால் செய்து கொடுக்கப்படாமையால் அலுவலக நடவடிக்கைளை புதிய வாடகை கட்டிடத்திற்கு கொண்டு வருவதற்கு 02 மாதங்கள் தாமதம் ஏற்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கட்டிடத்தில் அலுவலக நடவடிக்கைளை மேற்கொள்ளாத 2011 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு பெறுமதி கூட்டிய வரியுடன் சேர்த்து ரூபா 3,283,657 தொகையும் அலுவலக நடவடிக்கைளை நடாத்திச் சென்ற பழைய கட்டிடத்திற்கு மேலும் ரூபா 1,340,412 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் மொத்தம் ரூபா 4,624,069 தொகை விளைவற்ற கட்டிட வாடகையாக நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ii) வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்தின் வாடகை உடன்படிக்கையில் கையொப்பமிடும் போது அரசின் பிரதான மதிப்பீட்டாளரின் பரிந்துரையின் பிரகாரம் வீட்டு உரிமையாளர் சகல திருத்தங்களையும் வீதவரிக் கட்டணங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையை உள்ளடக்காமல் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட காரணத்தால் வருடாந்த வீதவரிக் கட்டணம்

அதிகரித்தமையால் ரூபா 269,535 அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்ததுடன், கட்டிடத்திற்காக ஏற்படுத்தப்பட்ட எந்தவொரு உடன்படிக்கை அடிப்படையில் மேற்கொள்ளவேண்டி ஏற்பட்ட செலவினங்களில் அரைப்பங்கினை அதிகாரசபையினால் செலவு செய்வதற்கு நேர்ந்திருந்தது.

(ஆ) அதிகாரசபையால் விமான ஓட்டுனர் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், உயரமான கட்டிடங்களுக்காக அங்கீகாரம் வழங்குதல் போன்ற பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் கடந்த 06 ஆறு ஆண்டுகளில் திருத்தப்படாமல் இருந்தது. இதன் காரணமாக சேவைகளை வழங்குவதற்காக செலவு செய்யப்பட்ட தொகைக்கு போதியளவில் கட்டணங்கள் அதிகாரசபைக்கு கிடைக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

திணைக்கள கொள்வனவுக் குழுவின் உறுப்பினராக பணிப்பாளர் (திரண்ட) நடவடிக்கைகளை மேற்கொண்டு வாடகை அடிப்படையில் கட்டிடமொன்றை எடுப்பதற்கான மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக கடமை புரிந்து கட்டிடத்தை வாடகைக்கு எடுத்தல், கொள்வனவு நடைமுறையை வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொண்டிருந்தமை என்பவற்றை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மீளாய்வாண்டின் போது ரூபா 78,807,771 கட்டிட வாடகையாக செலுத்தும் போது வழமையான திணைக்கள கொள்வனவுக் குழு மூலம் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வது போதுமானதாக இல்லாததுடன், அமைச்சின் கொள்வனவுக் குழுவிற்கு தொடர்புபடுத்தல் அவசியமாக இருந்தும் அவ்வாறான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.5 ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மனித வளங்கள்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக அதிகாரசபைக்குச் சொந்தமான 3 வாகனங்கள் அமைச்சரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்ததுடன், எரிபொருளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 632,581 அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 3.6 பதவியணி நிர்வாகம்

அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம்/ பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் | 01 | 01 |
| சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 34 | 26 |
| நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 41 | 35 |
| செயற்பாட்டு உத்தியோகத்தர்கள் | 55 | 53 |
| அலுவலக உதவியாளர்கள் | 34 | 30 |
| மொத்தம் | 165 | 145 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையின் நிதிப்பிரிவின் நிதி முகாமையாளர், பிரதி நிதி முகாமையாளர் என்ற இரண்டு பதவிகளும் நிறுத்தப்பட்டு ஆட்சேர்ப்பு நடைமுறை கோவையின் பிரகாரம் தகைமைகளைக் கொண்டிராத உத்தியோகத்தர் ஒருவரை பிரதி பணிப்பாளர் நிதி பதவியில் பதில் கடமை புரிவதற்காக நியமித்து 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பதில் கடமை கொடுப்பனவு செலுத்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(ஆ) 1997 ஒக்தோபர் 27 ஆம் திகதிய 124 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம், 7 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன், அப்பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் 2 ஆண்டுகள் முதல் 6 ஆண்டுகள் வரையான காலமாக பதில் கடமை புரிவதற்கு நியமிக்கப்பட்டு பதில் கடமை கொடுப்பனவாக ரூபா 2,124,313 செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்கு நடவடிக்கைகளும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின்போது பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே 85% முதல் 179% வரையிலான வீச்சில் கருத்திற் கொள்ளக்கூடிய விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டது. பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு அம்சங்களின்பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான சேகரிப்பு

(இ) செலவின முகாமைத்துவம்

(ஈ) அரசின் சட்ட விதிகள் பிரமாணங்கள் என்பவற்றறிற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல்

(உ) ஒப்பந்த நிர்வாகம்

(ஊ) ஆளணி முகாமைத்துவம்